# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்

முன்னிலை : **திரு.ப.பிரவீன் ஜீவா,** பி.ஏ.,பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
(முழு கூடுதல் பொறுப்பு)
அம்பாசமுத்திரம்.

2026 ஆம் ஆண்டு, ஜூலை மாதம், 09–ம் நாள், வியாழக்கிழமை

**இ.ம.எண். 3/2025**
**உள்**
**அசல் வழக்கு எண். 10/2022**

(CNR. No.TNTL0D-000009-2022)

பார்த்தீபன் ... மனுதாரர் / வாதி

/ எதிர் /

நாகராஜன் ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 10.06.2026–ஆம் தேதியன்று என்முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வா.வயிரவிநாயகன், பி.எஸ்ஸி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.கே.செல்வராஜ், பி.எஸ்ஸி.,பி.எல்., மற்றும் கே.எஸ்.ஜெகன்ஸ்ரீநாத், பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 10 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, மேற்படி ஆணையர் சர்வேயர் உதவியுடன் சொத்தினைச் சுற்றிப் பார்த்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அறிக்கை போதுமானதல்ல. என்ன விசயத்திற்காக ஆணையர் நியமனம் செய்யப்பட்டாரோ அதனை அவர் செய்யவில்லை. மாறாக, அவர் ஒரு தெளிவற்ற அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார். அந்த அறிக்கையில் வாதியின் சொத்தினை சரிவர அளந்து அதில் குறிக்கவில்லை. வாதி விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளதால், அதுகுறித்து தெளிவாக நிரூபிக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்படி ஆணையர் அறிக்கையினை ரத்து செய்து, வேறு ஒரு ஆணையரை நியமனம் வேண்டும். இல்லாவிட்டால் மனுதாரர்/வாதிக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும். எனவே, அசல் வழக்கில் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையினை ரத்து செய்து, தபசில் சொத்துக்களை மீண்டும் சுற்றிப் பார்த்து, உரிய விளக்கங்களுடன் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக வேறு ஒரு புதிய ஆணையரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டியது நீதியின் பொருட்டு நியாயமானது மற்றும் அவசியமானது. எனவே, இந்த இடைக்கால மனுவானது அனுமதிக்கப்பட வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

**3. எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரர்/வாதியின் மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை. மனுதாரர்/வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானதல்ல. மனுதாரர்/வாதி வேண்டுமென்றே வழக்கின் நடவடிக்கையை காலம்கடத்த வேண்டுமென்ற நோக்கத்தில் மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிர்கோரிக்கையில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளதால், ஆணையர் நியமனம் செய்ய கோரி மனு தாக்கல் செய்தார். அதனடிப்படையில் ஆணையர் தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு, அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஆணையர் அறிக்கையில் மனுதாரர்/வாதி

கூறுவது போல் குறைபாடு எதுவும் இல்லை. வழக்கில் சர்வேயரும் தாவா சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(ii) மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து புல எண்.963/6ல் உள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் புல எண்.963/4ல் உள்ளது. புல எண்.963/4ல் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதை மெய்ப்பிக்க ஆணையர் நியமனம் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி உரிமை கோரும் புல எண்.963/4 நிலம் மனுதாரர்/வாதி அவருக்கு பாத்தியப்பட்டது என உரிமை கோருகிறார். புல எண்.963/4ல் கட்டுமானங்கள் இருப்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. புல எண்.963/4 முழுவதும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதா? அல்லது மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டதா? என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும். அதற்கு ஆணையர் நியமனம் அவசியமில்லை. எனவே, ஆணையர் அறிக்கையை ரத்து செய்ய வேண்டியது அவசியமில்லை. புதிய ஆணையர் நியமனம் செய்ய வேண்டிய அவசியமுமில்லை. வழக்கு கடந்த 2022ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனு நிலைக்கத்தக்கதல்ல. எனவே, மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அசல் வழக்கில் ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையினை ரத்து செய்து, தபசில் சொத்துக்களை மீண்டும் சுற்றிப் பார்த்து உரிய விளக்கங்களுடன் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக வேறு ஒரு புதிய ஆணையரை நியமனம் செய்து உத்தரவிடக் கோரும் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு**

**5.** இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை. மனு, அபிடவிட் மற்றும் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளையொட்டியே மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் வாதிட்டார்கள்.

6. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்கோரிக்கை தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை, சுவாதீனம் பரிகாரங்கள் கோரி எதிர்கோருரிமை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்கோரிக்கை தபசில் சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய ஆணையர் நியமனம் செய்யக் கோரி தாக்கல் செய்த இ.ம.எண்.1/2022 மனுவானது அனுமதிக்கப்பட்டு, அதனடிப்படையில், அதனடிப்படையில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு கடந்த 27.01.2025ம் தேதியில் அறிக்கை மற்றும் வரைபடத்தினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆணையர் அறிக்கைக்கு மனுதாரர்/வாதி தரப்பில் கடந்த 24.02.2025ம் தேதியன்று ஆட்சேபணைகள் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு விசாரணை முடிக்கப்பட்டு, வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், தற்போது இந்த இடைக்கால மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மனுதாரரின் மனுவினை பரிசீலனை செய்து பார்க்கும்போது, என்ன விசயத்திற்காக ஆணையர் நியமனம் செய்யப்பட்டாரோ அதனை அவர் செய்யவில்லை என்றும், மாறாக, அவர் ஒரு தெளிவற்ற அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த அறிக்கையில் வாதியின் சொத்தினை சரிவர அளந்து அதில் குறிக்கவில்லை என்றும், வாதி விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளதால், அதுகுறித்து தெளிவாக நிரூபிக்க வேண்டியுள்ளது என்றும், எனவே, மேற்படி ஆணையர் அறிக்கையினை ரத்து செய்து, வேறு ஒரு புதிய ஆணையரை நியமனம் வேண்டும் என்றும், இல்லாவிட்டால் மனுதாரர்/வாதிக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், மனுதாரர் தரப்பில் ஆணையர் என்ன மாதிரியான தெளிவற்ற அறிக்கையை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்பதற்கு எந்தவொரு தெளிவான விளக்கமும் மனுதாரரின் மனுவில் குறிப்பிடப்படவில்லை.

அதேபோல், வாதியின் சொத்தினை எந்த வகையில் சரிவர அளந்து குறிக்கவில்லை என்பதனை நிரூபிக்கும் வகையில், எந்தவொரு சங்கதிகளும் மனுதாரரின் மனுவில் குறிப்பிடப்படவில்லை. மனுதாரரின் சொத்தினை எந்த வகையில் சரிவர அளந்து குறிக்கவில்லை என்பதனை நிரூபிக்கும் விதமாக எந்தவொரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

**8.** மேலும், நீதிமன்ற ஆணையருக்கு சமூகம் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தாவா சொத்தினை பார்வையிட்டு கடந்த 27.01.2025ம் தேதி நீதிமன்ற ஆணையர் அறிக்கை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனைக்காக இந்த மனுவின் மனுதாரருக்கு கடந்த 24.02.2025, 11.03.2025, 09.04.2025, 24.04.2025, 17.06.2025, 24.06.2025, 01.07.2025 ஆகிய தேதிகளில் போதுமான அளவுகள் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த மனுவின் மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை இல்லை என்று கடந்த 01.07.2025ம் தேதி எழுத்துமூலமாக மேற்குறிப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில், மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் இல்லை என்று முடித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த வழக்கானது வாதி தரப்பு சாட்சியத்திற்காக பட்டியலிடப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்தபோது இந்த வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் 05.11.2025ம் தேதி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

**9.** மேலும், நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் மற்றும் ஆணையர் அறிக்கையில் கண்டுள்ள விபரங்களை பார்வையிடும்போது, அசல் வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதி கோரியுள்ள பரிகாரத்தைப் பொறுத்து இறுதியாக தீர்மானிக்கும் வகையில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் உள்ளது என்று தெளிவாக தெரியவருகிறது. எனவே, நீதிமன்ற ஆணையரை மீண்டும் நியமித்து தாவா சொத்தினை மீண்டும் பார்வையிட கோரும் பரிகாரம் அவசியமற்றது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRAVEENJEEVA P

Uploaded on 10.07.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.07.10 17:35:39 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)
அம்பாசமுத்திரம்.

**மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் :-**

இல்லை

**மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

இல்லை

**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :-**

இல்லை

**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

இல்லை

PRAVEENJEEVA P

Uploaded on 10.07.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.07.10 17:35:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)
அம்பாசமுத்திரம்.